# அறிந்து கொள் நடைமுறைப்படுத்து

**பாலியல் கொடுமைகள் நிறைந்துள்ள இக்காலத்தில் திருச்சபைகளின் பொறுப்பு என்ன?**

திருமணத்தைப் பற்றிப் பேசுகின்ற பவுல் கன்னிமை மீது தம் வாசகர்களின் கவனத்தைத் திருப்புகிறார். அதன் மேன்மையை எடுத்துரைக்கிறார்.

**பரிசுத்த பவுலின் அறிமுக உரை (வச.25-28) :** மணமானவர்களுக்கு ஆண்டவர் கூறியதை நினைவுப்படுத்திய பவுல் திருமணமாகாதவர்களுக்கு கூற ஒன்றுமில்லை என்கிறார். சிலர் பிறவிலேயே மண உறவு கொள்ள முடியாதவராய் இருக்கின்றனர். வேறு சில மனிதரால் அந்நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர் மற்றும் சிலர் விண்ணரசின் பொருட்டு அந்நிலைக்குத் தம்மையே ஆளாக்கிக் கொள்கின்றனர்.

**நிர்விசாரமாயிராதே தீவிரம் காட்டு (வச.29-31) :** இறுதிக் காலம் நெருங்கிவிட்டபடியால் திருமணம் புரிவது, வணிகம் செய்வது முதலிய உலகக் காரியங்களில் இறை மக்கள் தமது கவனத்தைச் செலுத்தாது ஆண்டவரின் வருகைக்கு ஆயத்தப்பட வேண்டும். எஜமானின் வருகைக்காகக் கண்விழித்துக் காத்திருக்கும் ஊழியர் போன்று இறைவேண்டல், வேத வாசிப்பு, உபவாசம், ஆலய ஆராதனை ஆகியவற்றில் தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

**கர்த்தரைப் பற்றிக் கொள் (வச.32-34) :** திருமணமானவர்களுக்கு உலகக் காரியங்கள் தொடர்பான கவலைகள்-கணவன் மனைவி, மக்கள், குடும்பம் தொடர்பான கவலைகள் எழுவது இயற்கையே. இவ்வாறு பிளவுபட்ட சூழல் நிலவுவதால் அவர்களால் ஆண்டவருக்கென்று தங்களை முழுமையாக அர்ப்பணிக்க இயலவில்லை. திருமணமாகாதவர்களுக்கோ இத்தகைய கவலைகள் கிடையாது. இதனால் ஆண்டவரைப் பற்றியே முழு நேரமும் கண்ணும் கருத்துமாய் இருந்து தங்களை முற்றிலும் அர்ப்பணிக்க அவர்களுக்கு மிகுந்த வாய்ப்பு உண்டு.

**காலந்தாழ்த்தாதே, கடமையைச் செய் (வச.35-40) :** திருமணமாகாதவர்கள் தங்களின் முழு அர்ப்பணத்தின் வழியாக விரைவில் புலரவிருக்கும் விண்ணக வாழ்வை இங்கேயே இப்பொழுதே தொடங்கிவிடுவர். மறுவுலக வாழ்வின் அடையாளமாய் இவ்வுலகில் திகழ்கின்றனர். இத்தகு நிலையில் திருமணத்தைவிட மணத்துறவே சிறந்தது என்கிறார் பவுல். திருமண வாழ்வையே சாதாரண வாழ்க்கை முறையாகக் கொண்டிருந்தனர் யூதர்கள்.ஆண்டவரின் மக்களாகிய நாம் தேவன் நமக்குத் தந்த கடமைகளைச் சரிவர செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

**ஆண்டவரே, உமது வருகைக்குரிய அடையாளங்களைக் காண விழிப்பாயிருக்கவும், நீர் தந்த கடமையைச் சரியாக செய்யவும் துணிச்சலுடன் உம்மை எதிர்க்கொள்ளவும் அருள்புரியும். ஆமென்.**